www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

THIRUVANNAMALAI

RMI

# முதல் திருப்புதல் தேர்வு - 2023

10 - ஆம் வகுப்பு

## தமிழ்

நேரம் : 3.00 மணி

மதிப்பெண்கள் : 100

**பகுதி - I (மதிப்பெண்கள் - 15) அனைத்து வினாக்களுக்கும் விடையளி.**

**சரியான விடையை தேர்வு செய்க.** **15 X 1 = 15**

1. முத்துக் கொழிக்கும் கொற்கையின் அரசன் அ) சேரன் ஆ) சோழன் இ) பாண்டியன் ஈ) மூவரும்
2. கபிலரின் நண்பர் அ) நக்கீரன் ஆ) இடைக்காடனார் இ) பரஞ்சோதி முனிவர் ஈ) பரணர்
3. பாடு இமிழ் பனிக்கடல் பருகி என்னும் முல்லைப்பாட்டு வரிகள் உணர்த்தும் செய்தி யாது?
   அ) கடல் நீர் ஆவியாதல் ஆ) கடல் நீர் வெப்பமாதல் இ) கடல் நீர் குளிர்தல் ஈ) கடல் நீர் ஆவியாகி மேகமாதல்
4. பெப்பர் என்னும் இயந்திர மனிதனை உருவாக்கிய நாடு
   அ) இந்தியா ஆ) சீனா இ) அமெரிக்கா ஈ) ஜப்பான்
5. குலசேகர ஆழ்வாருக்கு மாயத்தால் மீளாத்துயர் தருபவர் யார்?
   அ) சிவன் ஆ) பெருமாள் இ) வித்துவக்கோட்டு இறைவர் ஈ) முருகன்
6. ஒரு மொழியில் உணர்த்தப்பட்டதை வேறொரு மொழியில் வெளியிடுவதை
   அ) கருத்து மாற்றம் ஆ) மொழிபெயர்ப்பு இ) மொழியாக்கம் ஈ) மொழிவளர்ச்சி
7. அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி மருளை அகற்றி மதிக்கும் பொருள்
   அ) தமிழ் ஆ) அறிவியல் இ) கல்வி ஈ) இலக்கியம்
8. ஆங்கிலேயருக்கு எதிராக சுதேசிக் கப்பல் நிறுவனத்தை தொடங்கியவர்
   அ) மா.பொ.சி ஆ) வ.உ.சி இ) திரு.வி.க ஈ) மூவரும்
9. மக்களே போல்வர் கயவர் அவரன்ன - இடம் பெற்ற அணி
   அ) சொல் பின் வரும் நிலையணி ஆ) உவமையணி இ) உருவகணி ஈ) தீவகணி
10. மாலவன் குன்றம் போனால் என்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்
    அ) திருச்சியும் மதுரையும் ஆ) திருச்சியும் திருத்தணியும்
    இ) திருப்பதியும் திருத்தணியும் ஈ) திருச்செந்தூரும் மதுரையும்
11. சங்கத் தமிழரின் திணைவாழ்வு எதை அடிப்படையாகக் கொண்டது?
    அ) நெசவுத்தொழிலை ஆ) வேளாண்மையை இ) வணிகத்தை ஈ) பண்பாட்டை
12. தென்னவன் மகளே திருக்குறளின் மாண்புகழே
    இன்னறும் பாப்பத்தே எண்தொகையே நற்கணக்கே
    தென்னவன் மகள் யார்? அ) தமிழரசி ஆ) தமிழ்மொழி இ) உமையாள் ஈ) கலைமகள்
13. எண் தொகை எனக் குறிப்பிடப்படும் நூல் எது?
    அ) எட்டுத்தொகை ஆ) பத்துப்பாட்டு இ) பதிற்றுப்பத்து ஈ) சிலப்பதிகாரம்
14. மலரடி இலக்கணக் குறிப்பு தருக.
    அ) இரட்டைக் கிளவி ஆ) உவமைத்தொகை இ) அடுக்குத்தொடர் ஈ) வினைத்தொகை
15. காலக்கணிதம் கவிதையில் இடம்பெற்ற தொடர்
    அ) இகழ்ந்தால் என் மனம் இறந்துவிடாது ஆ) என் மனம் இகழ்ந்தால் இறந்துவிடாது
    இ) இகழ்ந்தால் இறந்தால் விடாது என் மனம் ஈ) என் மனம் இறந்துவிடாது

**பகுதி - II (மதிப்பெண்கள் 18) பிரிவு - 1 ஏதேனும் நான்கனுக்கு மட்டும் விடையளிக்க.**

**வினா எண். 21க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** **4 X 2 = 8**

16. விடை கேற்ற வினா அமைக்க. அ) ஒத்துழையாமை இயக்கத்தை தொடங்கி வைத்தவர் காந்தியடிகள்.
    ஆ) பாரியும் கபிலரும் உற்ற நண்பர்கள்.
17. அறங்கூர் அவையம் குறித்து எழுதுக.
18. நிகழ்கால கலைகளுள் ஏதேனும் நான்கினைத் தருக.
19. செயற்கை நுண்ணறிவு கணிணியான வாட்சனைப் பற்றி எழுதுக.
20. பெற்றோர் வேலையிலிருந்து திரும்பத் தாமதமாகும்போது அழும் தம்பிக்கு நீங்கள் கூறும் அறிவுரை யாது?
21. குற்றம் என தொடங்கும் குறளை எழுதுக.

**பிரிவு - 2 ஏதேனும் ஐந்தனுக்கு மட்டும் விடை தருக.** **5 X 2 = 10**

22. பின்வருவனவற்றுள் சந்திப் பிழை நீக்கி எழுதுக. அ) உலக புகழ் பெற்ற அறிவியல் கண்டுபிடிப்புகளையும் இலக்கிய படைப்புகளையும் அறிவதற்கு வாய்ப்பு கிடைக்கிறது.
    ஆ) உங்கள் படைப்பு நுண்ணறிவு செயலாளரை கொண்டு படைக்க படவில்லை.
23. பின்வரும் கலைச்சொல்லின் பொருளை அறிந்து தமிழாக்கம் செய்க. அ) TEMPEST ஆ) MONO LINGUAL
24. ஒருமை பன்மைப் பிழைகளை நீக்கி எழுதுக. அ) அறநெறிச் சாரா அறங்கள் சமயம் சார்ந்தது.
    ஆ) மொழிப்பெயர்ப்பினால் புதிய சொற்கள் உருவாகி மொழிவளம் ஏற்படுகின்றது.



Scanned with OKEN Scanner

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

25. உயிரளபெடையின் வகைகள் யாவை?

26. தொகைச் சொற்களை பிரித்து விரித்து எழுதுக. அ) அறுசுவை ஆ) முக்கனி

27. பின்வரும் படிச்சொல்லை பெயரெச்சமாகவும், வினைமுற்றாகவும் மாற்று. படி அல்லது வந்து.

28. பகுபத உறுப்பிலக்கணம் காண்க. அ) வந்தனன் அல்லது வாழ்க.

**பகுதி - III (மதிப்பெண்கள் 18) பிரிவு - 1 எவையேனும் இரண்டனுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** **3 X 2 = 6**

29. இன்மையிலும் விருந்தோம்பல் பற்றி இலக்கியங்கள் கூறுவன யாவை?

30. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்கு சான்று தருக.

31. பின்வரும் உரைப்பத்தியை நன்கு படித்து வினாக்களுக்கு விடை தருக.

96 வகை சிற்றிலக்கியங்களுள் ஒன்று பிள்ளைத் தமிழ். இறைவனையோ, அரசனையோ, பாட்டுத் தலைவனையோ குழந்தையாக பாவித்து எழுதப்பட்ட இலக்கியம். பத்துப் பருவங்களாக பிரித்து பருவத்திற்கு பத்துபாடல்களாகப் பிரித்து மொத்தம் 100 பாடல்கள் உள்ளன. இது ஆண்பாற் பிள்ளைத்தமிழ், பெண்பாற் பிள்ளைத்தமிழ் என இரு வகைப்படும்.

***வினாக்கள் :*** 1) பிள்ளைத்தமிழின் இலக்கணம் யாது?

2) பிள்ளைத்தமிழ் எத்தனை வகைப்படும்? அவை யாவை? 3) பாட்டுடைத் தலைவர்கள் யாவர்?

**பிரிவு - 2 எவையேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக. வினா எண். 34 கட்டாய வினா)** **2 X 3 =6**

32. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாக பாவலரேறு கூறுவன யாவை?

33. கூத்தனை கூத்தன் ஆற்றுப்படுத்துவதை கூத்தராற்றுப்படை எவ்வாறு விளக்குகிறது?

34. செம்பொனடிச்சிறு எனத் தொடங்கும் பிள்ளைத்தமிழ் பாடலை அடிபிறழாமல் எழுதுக. ***(அல்லது)***
தூசும் துகிரும் என்று தொடங்கும் சிலப்பதிகாரப் பாடலை எழுதுக.

**பிரிவு - 3 ஏதேனும் இரண்டனுக்கு மட்டும் விடை தருக.** **2 X 3 =6**

35. வினாக்கள் எத்தனை வகைப்படும் அவற்றுள் இரண்டினை சான்றுடன் விளக்குக.

36. ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும் அலகிட்டு வாய்பாடு காண்க.

37. அணி விளக்கம் தருக. நிரல் நிறையணி அல்லது தற்குறிப்பேற்றணி.


**பகுதி - IV (மதிப்பெண்கள் 25) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **5 X 5 = 25**

38. **பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

*வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன்பால்*
*மாளாத காதல் நோயாளன் போல் மாயத்தால்*
*மீளாத் துயர்தரினும் வித்துவக்கோட்டம்மா நீ*
*ஆனாஉனதருளே பார்ப்பன் அடியேனே*

**வினாக்கள் :** 1) மாளாத காதல் நோயாளன் யார்? 2) இப்பாடலின் ஆசிரியர் யார்?
3) மாளாத - இலக்கணக்குறிப்பு தருக. 4) வித்துவக் கோட்டம்மர யார்?
5) யார் யாரிடம் கூறிய கூற்று?

39. படம் உணர்த்தும் கருத்தை நயமுற நான்கு தொடர்களில் எழுதுக.



40. எழுத்தர் பணி வேண்டி தன்விவரக் குறிப்பு ஒன்றை தயார் செய்து நிரப்புக.

41. பத்து வரிகளில் கவிதை எழுதுக. மனிதநேயம். ***(அல்லது)***

**தமிழாக்கம் செய்க.** Respected Gentleman, I am Raman studying tenth standard. I have come here to say a few words about our Tamil culture. Sangam literature shows that Tamils were best in culture and civilization about two thousand years ago. Tamils who have defined grammar for language have also defined grammar for life. Tamil culture is rooted in the life styles of Tamil throughout India.

42. **இலக்கிய நயம் பாராட்டல்.**

நிலாவையும் வானத்து மீனையும் காற்றையும்
நேர்பட வைத்தாங்கே
குலாவும் அமுதக் குழம்பை குடித்தொரு
கோல வெறி படைத்தோம்
உலாவும் மனச்சிறுபுள்ளினை எங்கனும்
ஒட்டி மகிழ்ந்திடுவோம்
பலாவின் கனிச்சுளை வண்டியில்ஓர் வண்டு
பாடுவதும் ஓர்வியப்போ - பாரதியார்.

**பகுதி - V (மதிப்பெண்கள் 24) அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** **3 X 8 = 24**

43. மொழிபெயர்ப்பின் பயன் குறித்து ஒரு கட்டுரை எழுதுக. ***(அல்லது)***
ஜெயகாந்தன் நினைவுச் சிறப்பிதழை வார இதழ் ஒன்று வெளியிட இருக்கிறது. அதற்கான ஒரு சுவரொட்டியை வடிவமைத்து அளிக்க.

44. சிலப்பதிகார மருவூர் பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடு ஒப்பிட்டு எழுதுக. ***(அல்லது)***
நும் பாட்ப் பகுதியில் இடம்பெற்ற மெய்க்கீர்த்தி பாடலின் நயத்தை விளக்குக.

45. அன்னம்மையா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினை விளக்குக. ***(அல்லது)***
புயலிலே தோணி கதையில் இடம்பெற்ற வருணனைத் திறனையும் அடுக்கு மொழிச் சொல்லாக்கங்களையும் கட்டுரை வடிவில் எழுதுக.



Scanned with OKEN Scanner

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com